**INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM**

**TERM -1 WORK SHEET (2018-19)**

**CLASS – VI – TAMIL**

# தமிழ்

## பகுதி –1

### அ.கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

தேசிக விநாயகம் பிள்ளை கி.பி.1876 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் பிறந்தார். இவரது பெற்றோர் சிவதாணு – ஆதிலட்சுமி. இவரது பாடல்கள் இனிமையும் , எளிமையும் நிறைந்தவை. குழந்தைகளுக்காகத் தெளிந்த தமிழில் இனிய கவிகள் பாடியவர். இதனால் 'கவிமணி' எனப் போற்றப்பட்டவர். ஆசிய ஜோதி , மலரும் மாலையும் போன்றவை இவர் எழுதிய நூல்கள் ஆகும். இவர் உரைமணிகள் என்னும் உரைநடை நூலையும் எழுதியுள்ளார். கவிமணி 1954 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

வினாக்கள்

1.கவிமணியின் பாடல்கள் எத்தகையவை ?

2.கவிமணி எங்கு , எப்போது பிறந்தார் ?

3.கவிமணி எழுதிய நூல்கள் யாவை ?

4.கவிமணியின் பெற்றோர் யாவர் ?

5.கவிமணி எப்போது இயற்கை எய்தினார் ?

ஆ.உனக்குப் பிடித்த பறவை அல்லது விலங்கு ஒன்றனைப் பற்றி கட்டுரையாக எழுதுக.

### இ. விடுப்புக் கடிதம் எழுதுக.

உடல் நலமின்மை காரணமாக பள்ளி வர முடியாமைக்கு விடுப்பு வேண்டி வகுப்பு ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி – 2 இலக்கணம்

**அ. சான்று தருக :-**

1. உயிர்மெய் எழுத்து மட்டும் இடம் பெறும் சொல்

2. உரிச்சொல்

3. வினைச்சொல்

4. ஆய்த எழுத்து இடம்பெறும் சொல்

5. பெயர்ச்சொல்

6. மெய்யெழுத்து இடம் பெறும் சொல்

7. ஓரெழுத்துச்சொல்

8. பலர்பால்

9. பன்மை

10. முன்னிலை இடம்

**ஆ. நிரப்புக :-**

1. மெய்எழுத்துகள் __________ , __________ , __________ என மூவகைப்படும்.

2. உரிச்சொற்கள் ______________________ உரியவை.

3. ஆய்த எழுத்திற்கு மற்றொரு பெயர் ____________________.

4. ஒருவன் செய்த வினையைக் குறிப்பது ______________

5. சால , நனி என்பதன் பொருள் __________

6. கொய்தான் என்பது _____________ சொல்

7. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு ___________என்று பெயர்

8. உயர்திணையில் ஓர் ஆணை மட்டும் குறிப்பது ________

**இ. அடைப்புக்குள் கூறியவாறு செய்க :-**

1. ஆரிய நாடு (உயிர் எழுத்தை எடுத்து எழுது?)

2.வல்லின மெய்யெழுத்துகளை எழுதுக.

3.சாலச் சிறந்தது (சால – எவ்வகைச் சொல்? )

4.நகர் (உரிச்சொல் சேர்த்து எழுதுக)

5.மதிவாணன்  (மாத்திரை எழுதுக)

6.உயிர்மெய்யெழுத்துகளின் எண்ணிக்கையை எழுதுக

7.நடிகை ( பெண்பாலில் எழுதுக)

8.நீவிர் ( தன்மை இடத்தில் எழுது)

## ஈ.தகுந்த இலக்கணக்குறிப்பு தருக :-

1.நனி மகிழ்ந்தாள் -

2.அ, இ, உ, எ, ஒ  -

3.பறவைகள் –

4.மணிமேகலை –

5.விளையாடினான்  -

6.மலையை அடைந்தேன்

7.எ∴கு –

8.ய, ர, ல, வ, ழ, ல-

## உ.சரியானதை தேர்ந்தெடுக்க :-

1. அ.மாநகர் - பெயர்ச்சொல்

ஆ.மாநகர் - வினைச்சொல்

இ.மாநகர் - உரிச்சொல்

2.அ.உலகம் – உயிர் எழுத்து சொல்லின் முதலில் இடம் பெற்றுள்ள சொல்

ஆ.உலகம் – உயிர் எழுத்து சொல்லின் இடையில் இடம் பெற்றுள்ள சொல்

இ.உலகம் – உயிர் எழுத்து சொல்லின் இறுதியில் இடம் பெற்றுள்ள சொல்

3.அ.களிறு – உயிர்மெய் நெட்டெழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

ஆ.களிறு – உயிர்மெய் குற்றெழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

இ.களிறு – மெய்யெழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

4.அ.அரும்பு – மூன்று மாத்திரை

ஆ.அரும்பு – மூன்றரை மாத்திரை

இ.அரும்பு– நான்கு மாத்திரை

## பகுதி 3 – மொழிப்பயிற்சி

### அ.பொருள் கூறுக :-

| | | |
|---|---|---|
| ஆணை - | அறிஞர் - | ஏனனம்- |
| இடும்பை - | காவாக்கால் - | தன்னெஞ்சு - |
| பயனிலா - | சினம் - | சுடும்- |
| இணங்கி - | கந்தம் - | மண்நீர் - |
| மடல் - | மகிழ் - | தெங்கு – |
| சின்னம் - | பொழிவு - | புரவி - |

### ஆ.பிரித்து எழுதுக :-

| | | |
|---|---|---|
| அரசாணை - | முரசறைந்து - | துண்டுக்கயிறு – |
| நன்றன்று - | வித்தாகும் - | சினங்காக்க – |
| சிற்றூறல் - | மடல்பெரிது - | அந்நன்றி – |
| தலையாட்டி – | மாநகரம் - | பனையோலை |

## இ.சேர்த்து எழுதுக :-

பொன் + காசு –　　கல் + கண்டு –　　பொறுத்து + அருள்க –

தன் + நெஞ்சு –　　தீ + ஒழுக்கம் –　　பயன் + உடைய –

இ + குதிரை　　மரம் + பொம்மை –　　மூன்று + கனி

## ஈ.எதிர்ச்சொல் தருக.

நல்லார் x தீயார்　　இணங்கி x விலகி

பெரிது x சிறிது　　நிறைய x குறைய

## உ.நிரப்புக :-

1.வேங்கை நாட்டு மன்னன் பெயர் ________________

2.அறிஞர் கூறிய செயலைச் செய்து வந்தவன் _____________

3.சாம்பலைக் ____________ திரிக்க வேண்டும்.

4.எறும்பு சங்கின் எதிர்ப்புறம் வர _____________ துண்டு வைக்கப்பட்டது.

5.திருக்குறளை இயற்றியவர் ______________

6.நன்றிக்கு வித்தாகும் ______________

7.திருக்குறளில் ______________ அதிகாரங்கள் உள்ளன.

8.சிறிய இதழ்களை உடைய மலர் _____________

9.குதிரை உருவங்கள் ___________ செய்யப்படுகின்றன.

10. மாம்பழத்திற்குப் புகழ் பெற்ற நகரம் ___________

## ஊ.முதல் எழுத்தை மாற்றி வேறு வேறு சொல்லாக்குக.

1.நாடி - ____________ , ______________ , _______________ , ___________

2.சொல் - ______________ , ______________ , ______________ , ______________

ஏ.முடியும் சொல்லைக் கொண்டு தொடங்குக

வடமதுரை - ______________ , ______________ , ______________ , ______________

ஏ.ஒரு சொல் பல பொருள் எழுதுக.

அடி - ______________ , ______________ , ______________

ஆறு - ______________ , ______________ , ______________

## பகுதி 4

### அ.கீழ்க்காணும் உரைநடைப் பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி :-

அரசரின் ஆணை முரசறைந்து அறிவிக்கப்பட்டது.நாடெங்கும் ஒரே பரபரப்பு. மக்கள் அனைவரும் மிகுந்த வருத்தத்துடன் முதியவர்களை அண்டை நாடுகளுக்கு அனுப்பினர். ஆனால் , மதிவாணன் என்னும் இளைஞன், வயதான தன் தந்தையின் மீது கொண்ட அன்பால், அவ்வாறு செய்யவில்லை. தன் வீட்டிலேயே மறைவான இடத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தான்.

**வினாக்கள்**

1.மக்கள் முதியவர்களை அண்டை நாடுகளுக்கு அனுப்பக் காரணம் ____________

அ.மக்களது விருப்பம் ஆ.முதியவர்களது விருப்பம் இ.அரசரின் ஆணை

2.மதிவாணன் என்பவன் ஓர் ____________

அ.அரசன் ஆ.இளைஞன் இ.அமைச்சன்

3.மதிவாணன் தன் தந்தையை மறைத்து வைத்த இடம் ____________

அ.தன் வீடு ஆ.காடு இ.அரண்மனை

4.முதியவர் - எதிர்ச்சொல் ____________

அ.வயதானவர் ஆ.இளையவர் இ.பெரியவர்

## ஆ. அடிமாறாமல் எழுதுக :-

1.' நன்றிக்கு' , 'சொல்லுக' எனத் தொடங்கும் குறள்

2.' நன்று' , 'சுடும்' என முடியும் குறள்

3.' நல்லாரை' எனத் தொடங்கும் மூதுரைப்பாடலை எழுது.

## இ. குறுகிய விடையளி :-

1.சினத்தை ஏன் அடக்க வேண்டும் ?

2.தன்னெஞ்சே தன்னைச்சுடும் - ஏன் ?

3.எப்போதும் துன்பம் தருவது எது ?

4.மதிவாணன் தன் தந்தையை எங்கே மறைத்து வைத்தான் ?

5.மதிவாணன் 'என்னைப் பொறுத்தருள வேண்டும்' என ஏன் கூறினான் ?

6.வேங்கை நாட்டுக்கு வந்தவர் யார் ? அவர் பெயர் என்ன ?

7. தாழை , மகிழம்பூ ஒப்பிடுக.

8.வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர் கூறிய செயல்கள் யாவை ?

9.மகளிர் சுய உதவிக் குழுக்கள் எவற்றைக் கொண்டு பொம்மைகள் செய்திருந்தனர் ?

## ஈ. விரிவான விடையளி :-

1.சாம்பலில் கயிறு எவ்வாறு செய்யப்பட்டது ?

2.நமக்கு நன்மை தருவனவாக ஔவையார் கூறுவன யாவை ?

3.திருக்குறள் குறிப்பு வரைக.

4.புரவி எடுப்பு - என்றால் என்ன ?

## உ. முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குபடுத்தி பத்தியாக்குக:-

1. கவிஞர் கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப்பாடல்களை இயற்றியுள்ளார்.

2. சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார்.

3. தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கினார்.

4. இவரின் இயற்பெயர் முத்தையா.

5. இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

6. இவருக்குக் காரைமுத்துப் புலவர் , வணங்காமுடி , பார்வதிநாதன் , ஆரோக்கியநாதன், கமகப்பிரியா எனப் புனைப் பெயர்கள் உண்டு.

***************